# முஸ்லிம்சங்க மறுகமலம்

1—1—20-ல் பிரசங்கிக்கப்பட்டது

## இஸ்லாத்தின் இணையில்லா அற்புதம்

" அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்,

1. (வெயில் ஏறும் நேரமான) முற்பகல்மீது ஆணையாகவும்,

2. (தனது இருளால்) மூடுகிற நேரமான இரவின் மீது ஆணையாகவும்.

3. உமது நாயகன் உம்மைக் கைவிடவுமில்லை, பகைக்கவுமில்லை.

4. இன்னும், முன்னையதைப் பார்க்கினும் பின்னையது (அதாவது முந்திய நிலைமையினும் பிந்திய நிலைமை) உமக்கு நல்லதா யிருக்கிறது.

5. இன்னும், உம்முடைய நாயகன் இனிமேல் (சீக்கிரம்) உமக்குக் கொடுப்பான் ; பின்பு நீர் திருப்திகரமாக (அவன் கிருபையை)ப் பொருந்திக் கொள்வீர்.

6. உம்மை அனாதையாக (அவன்) காணவில்லையா? பின்பு அவன் உம்மை ஆதரித்தான்.

7. இன்னும், உம்மை வழிதெரியாதவராகக்கண்டு பின்பு (உமக்கு) வழி காட்டினான்.

8. இன்னும், உம்மை ஏழையாகக்கண்டு பின்பு (உம்மைச்) சீமானாக்கினான்.

9. ஆதலின் அனாதையை உக்ரமாக நடத்தாதீர்.

10. இன்னும், யாசகனை விரட்டாதீர்.

11. இன்னும், உமது நாயகன் (அளித்த) செல்வத்தை எடுத்தோதுவீர்."—அல்குர்ஆன், 93.

முற்பகல் என்னும் பெயரையுடைய இந்த ஸூராவானது குர்ஆன் ஷரீபில் 93-வது அத்தியாயமாய் விளங்குகிறது. இது நமது நாயகம் நபி முஹம்மது முஸ்தபா ரஸூல் (இவர்களுக்கு இறைவனருளும் நன்மாராயமுமுண்டாகுக) அவர்கள் திருமக்கா ஷரீபிலிருந்தகாலத்தில் இறங்கியது. திருமதீனாவுக்கு நபிகள் பிரான் ஏகுமுன் மக்கா ஷரீபில் அவர்களிருந்து விக்கிரக ஆராதனைக்காரர்கள் கையில் அதிக கஷ்ட மனுபவித்தபோது மேலேசொன்ன ஸூரா இறக்கப்பட்டது. நபிகள் பெருமானா ரவர்களுடைய பிந்தியகாலத்தில் உண்டாகக்கூடிய ஜயமானது ஒருவராலும் யூகித்தறிய முடியாதவேளையில் இவ்வத்தியாயம் வெளியிடப்பட்டது. அடிக்கடி எம்பெருமானாரவர்களுக்கு இறைவனிடத்திலிருந்து தூது வருவதுண்டு. ஒரு சமயம் 15 தினம் வரையில் இறைவனிடத்திலிருந்து தூது வாராமல் நின்றுவிட்டது. நபிகள் பிரானுக்கு இத்தூதானது பிராணமயமா யிருந்தது. இப்படிப்பட்ட தூது நின்று போனவுடன் திருநபியவர்கள் மிகத் துயரத்துள் ஆழ்ந்தார்கள். அல்லாஹ்வுக்காக ஐம்பது வயதுமட்டும்

பாடுபட்டு உற்றார் உறவினர் ஊரார் முதலியோரின் வசை மொழியையும் ஏற்றுக்கொண்டு தங்களுக்கு வரும் கஷ்ட நிஷ்டூரங்களை யெல்லாம் ஒருபொருளா யெண்ணாமல் சுத்த சத்திய சன்மார்க்கத்தைப் பரப்புவதிலேயே உற்சாகம் கொண்டிருக்கும்போது அவர்களுக்குப் பிராணனைப்போன்ற அவ்வளவு அருமையான அல்லாஹ்வின் தூது 15 தினம் மட்டும் வரவில்லையென்றால் அவர்களது மனநிலைமை எவ்வாறு இருந்திருக்கு மென்று நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள். "உடன் பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டாம், உடன் பிறந்தே கொல்லும் வியாதி," என்பதே போல் அபூஜஹல் முதலிய சுற்றத்தாரெல்லாம் எமது பெருநபி யவர்களுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென்று பரிகசம் செய்யும் வேளையில் ஆண்டவனது தூதும் நின்றுவிட்டதென்றால் நபியவர்களின் மனக்கலக்கம் எப்படி யிருந்திருக்கக்கூடும்? சிறு பிராயத்தில் நபியவர்களை அல்அமீன் (சரியான நியாயஸ்தர், நம்பிக்கைக்கு உரியவர்) என்று அழகிய நாமத்துடன் அழைத்தவரெல்லாரும் அப்போது அதிக விரோதத்துடன் அவர்களையும் அவர்களது சன்மார்க்கத்தையும் அடியோடு ஒழிக்கப்பார்த்தனர். அப்படிப்பட்ட வேளையில் 15 தினம் வரையில் தூதுவரவில்லை. அச்சமயமோ, நுபுவ்வத்துக்குமுன் நபிகள் பெருமானாரை அதிகமரியாதையுடன் நன்கு மதித்தவரெல்லோரும் பிறகு அவர்களுக்குப் பித்துப் பிடித்துவிட்டதென்று தூஷிக்கும் வேளையாயிருந்தது; அவர்கள் இனிமேல் பால்யர்களல்லர்; வயது 40 சென்ற பெரியோராயிருந்தார்கள். அதுவரையில் அல்லாஹ்வுக்காகப் பாடுபட்டுக் கடைசியில் விருதாவாய்ப்போகுமோ என்னும் அச்சம் யாருக்குத்தான் உதிக்காது? நபியவர்களின் தோ

மூர்களெல்லாரும் விக்கிரக ஆராதனைக்காரர் கையில் பல விதமான சித்திரவதைகளையெல்லாம் அனுபவித்தார்கள். தாங்கமுடியாத கொடிய பாதகச்செயல்களை யெல்லாம் பொறுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் சிலர் கொலையும் உண்டார்கள். நபியவர்களின் (இவர்களுக்கு மேன்மேலும் நற்பதவியை இறைவன் அளிப்பானாக) உயிருக்கும் தீங்கு இழைப்பதற்கு எதிரிகள் கங்கணங் கட்டிக்கொண்டிருந்தார்கள். இப்படி யெல்லாம் அவர்களுக்கு அபாயம் நேரிடும்போது தாங்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் இறைவன் தன்காரியத்துக்கு வேண்டிய உதவியைத் தானே அளிப்பானென்றும் உறுதிகொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட வேளையில் 15 தினம் வரையில் தூதுவருதல் நின்று விட்டது. "அல்லாஹ் முஹம்மதை (ஸல்)க்கைவிட்டு விட்டான்; அவரிடத்தில் விரோதம் கொண்டு வெறுத்துவிட்டான்," என்றுசொல்லி விரோதிகளெல்லாம் கைகொட்டி நகைக்க ஆரம்பித்து விட்டனர். நபிகள் பெருமானாரவர்கள் தங்களுக்கே தெரியாமல் ஏதோ தவறுசெய்து விட்டதால் அவர்களிடத்தில் இறைவனுக்கு விரோதமுண்டாய் விட்டதென்று காபிர்களுள் பலர் எண்ணியிருக்க மாட்டார்களா? நபியவர்கள் செய்த குற்றமே அவர்களுக்கு விரோதமாய் முடிந்துவிட்டதென்றும் அதனால் நபியவர்கள் மன உறக்கம் கொண்டிருப்பதாயும் அவர்கள் எண்ணியிருக்க மாட்டார்களா? அல்லாஹ்வின் அருள்வாக்கை அதிக ஆவலுடன் நபிகள் பிரான் அப்போது எதிர்பார்த்திருந்ததாய் நாம் கேள்விப்படுகிறோம். அப்போதிருந்த நிலைமைதான் இஸ்லாத்துக்கு, "தனது இருளால் மூடுகிற நேரமான இரவா" யிருந்தது; இப்போது நமது திருநபியவர்களை மனக்கிலேச

மென்னும் இருள்நிறைந்த இரவு மூடிக்கொண்டிருந்தது. அதன்பின் கீழ்வருமாறு ஒரு ஸூரா இறங்கிற்று:—

(1) "முற்பகல்மீது ஆணையாகவும்.

(2) மூடுகிற நேரமான இரவின்மீது ஆணையாகவும்,

(3) உமது நாயகன் உம்மைக் கைவிடவுமில்லை, பகைக்கவுமில்லை,

(4) இன்னும், முன்னையதைப் பார்க்கினும் பின்னையது உமக்கு நல்லதா யிருக்கிறது.

(5) இன்னும், உம்முடைய நாயகன் இனிமேல் (சீக்கிரம்) உமக்குக் கொடுப்பான்; பின்பு நீர் திருப்திகாமாக (அவன் கிருபையை)ப் பொருந்திக் கொள்வீர்..."

என்ன ஆச்சரியம்! இதில் சொல்லப்பட்ட முன்னறிக்கையான தீர்க்க தரிசனம் பின்னால் முழுதும் நிறைவேற வில்லையா!! திருநபி யவர்களின் வாழ்நாளின் முற்பகுதியைக்காணப் பிற்பகுதி அதிக மேன்மை யுற்றதாயும். சிலாக்கியமானதாயும் இல்லையா? அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த நாள் அவர்களுடைய ஜீவதிசைக்குள்ளேயே வரவில்லையா? அல்லாஹுத் தஆலா அவர்களுக்கு அருளைச் சீக்கிரம் கொடுக்க வில்லையா? அவனது கருணையை நபிகள் பிரான் சம்பூரணமாய் அடையவில்லையா? எல்லாராலும் துரத்தப்பட்ட எம்பெருமானார் பிறகு எல்லாராலும் எதிர் கொண்டழைக்கப் படவில்லையா? பித்தரென்று எண்ணப்பட்ட இவர்கள் மகா பக்தரென்று பின்னால் உலகமுழுதும் சொல்லவில்லையா? தங்கள் ஜனனபூமியான திருமக்காவை விட்டு ஓடினவர்கள் பிறகு அந்நகரை வென்று அரபுநாடு முழுமைக்கும் அரசாயும் ஞானகுருவாயும் விளங்கவில்லையா? இன்றைக்கும் இவ்வுலகில் 40 கோடி மனிதர்கள் இவர்களது சன்மார்க்கத்தில் சேர்ந்த

வர்களாயில்லையா? 50 வயதுக்குமேல் உற்றாரால் உதாசினிக்கப்பட்டு ஊராரால் ஒதுக்கப்பட்டு மித்திரரால் பித்தரென்று எள்ளப்பட்டுக் கண்டகண்டபேர் கண்டகண்ட வண்ணம் தூஷிக்கும் அச்சமயத்தில் யாருக்குத்தான் இப்படிப்பட்ட முஹம்மது (ஸல்) பின்னொரு காலத்தில் உன்னத நிலைமைக்கு வருவார்கள் என்பது மனத்தில் உதித்திருக்கக்கூடும்? பொய்யரென்றும் போலிநபியென்றும் வண்டப்புறட்ட ரென்றும் கருதப்பட்ட அந்நாளில், நபியவர்களின் பிற்பகலின் வாழ்வின் உன்னதம் இப்படியிருக்குமென்று எந்த மனிதனால் யூகித்திருத்தல் கூடும்? அப்போது அவர்களுடைய பின்பற்றுவோர்களான சிலர் மட்டும் அவர்களை நம்பினார்கள். எம்பெருமானார் அப்போதிருந்த நிலைமையைக்கண்டுதான் எதிரிகளெல்லாரும், அல்லாஹ் முஹம்மதை (ஸல்)க்கைவிட்டு விட்டான்; அவரிடத்தில் விரோதங்கொண்டு வெறுத்து விட்டான், என்று பரிகசம் செய்ய ஆரம்பித்தனர். அப்படிப்பட்ட காலத்தில் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அப்படிப்பட்ட ஒருவர் மேற்கூறிய ஸூராவின் வாக்கியங்களைச் சொன்னபோது நாமே அக்காலத்தில் நேரிலிருந்து கேட்டிருப்போமாயின் இந்த ஸூராவில் சொல்லப்படும் தீர்க்கதரிசனமான அற்புதம் ஒருபோதும் நிறைவேறக் கூடியதல்லவென்று சந்தேகங்கொண்டிருக்க மாட்டோமா? இதை வெறுங் கனவென்று நினைத்திருக்க மாட்டோமா? அப்படி யிருந்தும் இந்தத் தீர்க்கதரிசனம் எவ்வளவு அழகாக நிறைவேறி யிருக்கிறது பாருங்கள்! இஃது எப்படிப்பட்ட அற்புதம்!! இந்த ஸூரா இறங்கியபோது இதில்சொல்லியிருப்பதெல்லாம் வீண் கனவென்று பரிகசம் செய்தவர்களெல்லாரும் உயிருடனிருக்கும்போதே இந்த அற்புதம்

நிகழ்ந்தது. அவர்கள் தங்களுடைய நேத்திரங்களால் இந்த ஸூராவில் சொன்ன அற்புதம் நிறைவேறுவதைக் கண்டு அளவில்லா ஆச்சரிய மடைந்தார்கள். நான் உங்களுக்குச் சொல்லும் இவ்விஷயமெல்லாம் கட்டுக்கதையென்று எண்ணவேண்டாம். ஈதெல்லாம் உண்மையென்பது சரித்திர முணர்ந்தவர்கட்குத் தெரியும். இந்த ஸூராவில் இனிவரும் உன்னதத்தைச் சொல்லும்போது அந்தத் தீர்க்கதரிசனம் மெய்யாகவே நிகழக்கூடிய தென்பதை எண்பிக்கும்பொருட்டு இறைவன் திருநபியவர்கட்கு அவர்களுடைய முந்திய சரித்திரத்தை எடுத்துக் கூறுகின்றான்.

(6) "உம்மை அனாதையாக (அவன்) காணவில்லையா? பின்பு அவன் உம்மை ஆதரித்தான்.

(7) இன்னும், உம்மை வழிதெரியாதவராகக்கண்டு பின்பு (உமக்கு) வழிகாட்டினான்.

(8) இன்னும், உம்மை ஏழையாகக்கண்டு பின்பு (உம்மைச்) சீமானாக்கினான்."

இவை யெல்லாம் திருநபியவர்கட்கு அவர்கள் வணங்கிக் குறையிரந்தபடி ஆண்டவனது கிருபையால் கிடைத்தன. இவர்களுடைய ஆயுளில் இதற்குமுன் இருள்மூடிய இரவு இருந்திருக்கிறது. ஆனால் இப்போதிருப்பதுபோல் அவ்வளவு அதிகமான இருள் இதற்குமுன் இருந்ததில்லை. ஆனால் ஆண்டவன் இதுவரையில் நபியவர்கட்குச் செய்து வந்த கிருபையைக்கொண்டு இனிமேலும் வரப்போகின்ற கிருபையை மெய்ப்பிக்கிறான். எவ்வளவுக் கெவ்வளவு இருள் அதிகமாய் மூடியிருக்கிறதோ, எவ்வளவுக்கெவ்வளவு முற்பகலில் பனியும் குளிரும் அதிகமாயிருக்கிறதோ, எவ்வளவுக்கெவ்வளவு எம்பெருமானின் வணக்க

மும் உருக்கமும் அதிகப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு இனிவரும் உன்னதம் பெருமை பெற்றதாயிருக்கும்.

(9) "ஆதலின் அனாதையை உக்ரமாக நடத்தாதீர்.

(10) இன்னும், யாசகனை விரட்டாதீர்.

(11) இன்னும் உமது நாயகன் (அளித்த) செல்வத்தை எடுத்தோதுவீர்," என்று அல்லாஹுத்தஆலா எமது நபியவர்கட்கு எச்சரிக்கை செய்கிறான்.

இதன் தாத்பரியமாவது, தன்னுயிரைப் போல் மன்னுயிரையும் நினைக்கவேண்டுமென்பதும் எல்லாப்புகழும் அல்லாஹுத்தஆலாவுக்கே உரியதென்பதும் ஆகும். மனிதர்களுக்கும் அல்லாஹ்வுக்கும் நாம் செய்யவேண்டியதைச் செய்துவந்தால் அதற்குப் பலாபலனைக் கொடுப்பது ஆண்டவன் பொறுப்பாகும். இனிவரும் காரியங்களை ஆட்சி செய்பவன் இறைவனாகும். நீங்கள் செய்யவேண்டியதை ஒழுங்காய்ச் செய்வீரேல் அதற்கு நம் இறைவன் தக்கபடி பலனளிப்பான். "முற்பகல் மீது ஆணையாகவும் மூடுகிற நேரமான இரவின் மீது ஆணையாகவும், உமது நாயகன் உம்மைக் கைவிடவுமில்லை. இன்னும் முன்னையதைப் பார்க்கினும் பின்னையது உமக்கு நல்லதாயிருக்கிறது. இன்னும் உம்முடைய நாயகன் இனிமேல் (சீக்கிரம்) உமக்குக்கொடுப்பான்; பின்புநீர் திருப்திகரமாக (அவன் கிருபையைப்) பொருந்திக்கொள்வீர்."

முஸ்லிம் சகோதரர்காள்! நமது நபிகள் பெருமானாரவர்களின் ஜீவிய சரித்திரமும் முக்கியமாய் அவர்கள் தீனுல் இஸ்லாத்தைப் பரப்புவதற்குப்பட்ட கஷ்டநிஷ்டூரங்களும் நம் மூமின்களுக்கு ஓர் அறிகுறியாயிருக்கின்றன; தீனுல் இஸ்லாத்துக்கே இனி நடக்கப்போகும் வைபவங்களையும் மேற்கூறிய அறிகுறியானது விளக்கிக்

காட்டுகின்றது. நமது சன்மார்க்கத்துக்கு இதுவரையில் எத்தனையோ முறை இருள்மூடிய காலம் வந்திருக்கிறது; ஆனால் இப்போது இஸ்லாத்துக்கு ஏற்பட்டிருக்கும் இருளைப்போல் இதற்குமுன் எப்போதும் ஏற்பட்டதில்லை. ஆனால் இதுவரையில் அல்லாஹுத்தஆலா நம் சன்மார்க்கத்துக்கு செய்துவந்திருக்கும் உதவியால் இனிமேலும் கைவிடமாட்டானென்றே நாம் திண்ணமாய் எண்ணுவோம். மனிதரின் மூளையிலுதிக்கும் அறிவின் முதிர்ச்சியால் எதிர் பாராத அற்புதங்களையெல்லாம் ஆண்டவன் நிகழ்த்தியிருக்கிறான். இஸ்லாத்துக்கு இப்போது வந்திருக்கும் அபாயம் மிகப்பெரியதே; ஆனால் இது வரையில் ஆண்டவன் நமக்குச் செய்து வந்திருக்கும் கிருபாகடாக்ஷத்தால் இனிமேலும் நம்மைக் கைவிடமாட்டான். "முற்பகல் மீது ஆணையாகவும், மூடுகிறநேரமான இரவின்மீது ஆணையாகவும், உமது நாயகன் உம்மைக் கைவிடவுமில்லை, பகைக்கவுமில்லை." ஆண்டவனுடைய கிருபாகடாக்ஷத்தை நாம் மறப்போமாயின் நன்றி மறந்த மிகக்கொடிய பாதகராக ஆய்விடுவோம்.

ஆண்டவன் சொன்னதுபோல் செய்வது மட்டுமே நமது கடமை. அதன் முடிவைக்குறித்துத் தீர்மானம் செய்வதாவது தீர்க்காலோசனை செய்வதாவது நம்மாலியலுங் காரியமன்று. இறந்தோரை அல்லாஹுத்தஆலா பிழைப்பிப்பது போலும் பிழைத்திருப்போரை அவன் இறக்கச்செய்வதுபோலும் இரவிலிருந்து பகல் தோன்றுவதுபோலும் பகலிலிருந்து இரவு தோன்றுவதுபோலும் தீமையினின்று எப்பொழுதேனும் நன்மை வருவதையும் நன்மையினின்று எப்பொழுதேனும் தீமை வருவதையும் நாம் பிரத்தியக்ஷமாய்க் கண்டதில்லையா? இவையெல்

லாம் இன்னவிதம் நடைபெறுகின்றன வென்று நம்மால் கண்டு பிடிக்கமுடிகிறதோ? இவையெல்லாம் இப்படி யிருக்கும்போது இனி வரும் விஷயங்களை நாம் எப்படி முன்னறிந்து சொல்லமுடியும்? இனி இவ்வுலகத்தில் நடக்கவேண்டிய காரியம் இன்னது இன்னதென்பது ஆண்டவ னொருவனுக்கே தெரியும். அவனன்றி ஒருவரும் அந்த இரகசியத்தையறியார். ஆனால் நமக்குமட்டும் அவன் ஒரு விஷயத்தை அறிவித்திருக்கிறான். சராசரங்களுக்கு எல்லாம் கருணாநிதியான அல்லாஹுத்தஆலா ஒருவனே என்றும் அவன் தன் தனித்தூதரான முஹம்மது முஸ்தபா ரஸூல் (இவர்களுக்கு இறைவனருளும் அவன் நன் மாராயமு முண்டாகுக) அவர்கள் மூல்யமாய்த் தன் ஒப்பற்ற திரு வேதத்தை (குர்ஆன் ஷரீபை) வெளியிட்டிருக்கின்றானென்றும், மருவற்ற அத்திருவேதத்தின்படி நாம் நடப்போமாயின் நமக்கு நிச்சயமாய் வெற்றியுண்டாகுமென்றும் நமக்கு அல்லாஹுத்தஆலா அறிவித்திருக்கிறான். இது வரையில் இறைவன் நமக்குச் செய்து வந்திருக்கும் உதவிகளைக்கண்டு நாம் அவன் சொல்லியருளியபடி நடத்தவே நமது கடமையாகும். நாம் நம்முடைய கடமையைச் செய்து வருவோமாயின் இதுவரையில் உதவி புரிந்த நாயகன் இனியும் நமக்கு வெற்றியைக் கொடுப்பான். அவன் சொன்ன வண்ணம் நாம் நடப்போமாயின் இறைவன் தன் வாக்குப்போல் நமக்கு எல்லா நலனும் எய்துவிப்பான். இதுவரையில் முஸ்லிம்களெல்லோரும் இறைவனது ஆக்ஞைப்படி நடந்து வந்திருப்போமாயின் இப்போது இஸ்லாத்துக்கு நேரிட்டிருக்கும் பெரிய விபத்து ஒருபோதும் நேரிட்டிராது. எப்போது முஸ்லிம்கள் குர்ஆன் ஷரீபுக்கு மாறாக நடக்கத் தலைப்பட்டனரோ

அப்போதே இச்சன்மார்க்கத்துக்குப் பழுதும் பலஹீன மும் ஏற்பட்டுவிட்டன. ஓ ஈமான் கொண்ட சகோதரர் காள்! உங்களுக்குள் தெரியாதவர்களுக்குத் தெரிந்தவர் கள் இஸ்லாத்தின் தத்துவத்தை உள்ளது உள்ள வண்ண மே ஒளியாமல் எடுத்தோதுங்கள். உங்களுக்குள் செல்வ வான்களா யிருப்பவர்கள் ஏழை முஸ்லிம்களை முன்னுக் குக் கொண்டுவரப் பாடுபடுங்கள். நம்முஸ்லிம்களில் கல்வி அறிவு ஒழுக்கம் மார்க்க உணர்ச்சி இவற்றில் குறைவா யிருப்பவர்களை நல்வழியிலாக்கி அவர்களை மேன்மைப் படுத்த முயலுங்கள். நமக்குள் ஒருவருக்கொருவர் வைக் கும் பொருமையையும் புழுக்கத்தையும் ஒதுக்கிவைத்து எல்லோரும் நல்லவரென்றே இஸ்லாத்தின் முன்னேற்றத் துக்காக ஒத்துழைப்போம். முஸ்லிம்களுக்குள் ஒருவருக் கொருவர் இருக்கும் வேற்றுமையான பாகத்தைக்காட் டினும் அவர்களுக்குள் ஒற்றுமையான பாகமே மிகுந்திரு க்கின்றது; ஆதலின் நமது சகோதர முஸ்லிம்களிடத்தி லுள்ள சிலாக்கியக் குறைவான பாகத்தைக் காட்டினும் மிகுந்து கிடக்கும் சிலாக்கியமான பாகத்தைக்கண்டு சந் துஷ்டி அடைவோமாக. நமக்குள் எவ்வளவுக் கெவ்வளவு ஒற்றுமை யிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு உலகத் தார் நம்மீது கவுரவம் வைப்பார்கள். நமது ஒற்றுமை யின் குறைவே எதிரிகளுக்கு அதிக இடங்கொடுத்து இஸ் லாத்தைத் தாக்கும்படி தைரியமுண்டாக்குகிறது. நமக் குள் ஒற்றுமையும் உழைப்பும் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமா யிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு வெற்றியும் அதிகப்படும்.

இராணுவப் பலமிருந்தால்தான் இஸ்லாமும் பலப் படுமென்று எமது சகோதரர்காள்! நீங்கள் தவருக எண்

ணவேண்டாம். இஸ்லாத்துக்கு எக்காலத்திலும் இராணு வப்பலம் வேண்டுமென்னும் அவசியமே யிருந்ததில்லை. ஏனெனின் நமது சன்மார்க்கம் இதரர்களின் சமயங்களைப் போல் வாளாயுதத்தால் பரவியதன்று. நமது நபிகள் பெரு மானார் ஒருபோதும் சண்டையை வலுவில் உண்டுபண்ண வே யில்லை. இஸ்லாம் ஒருபோதும் ஒரு யுத்தத்தை வலு வில் ஆரம்பித்ததில்லை. இச்சன்மார்க்கத்தின்மீது இதரர் வலுவில் சண்டைசெய்ய வந்தபோது இஸ்லாம் தற்காப் புச்செய்து கொள்ளும் பொருட்டுச் சண்டைசெய்த துண்டு. இஸ்லாத்தின் சாந்தமான உபதேசங்களை வணக் கத்துடன் கேட்க யோக்கியமில்லாத மனிதர்கள் இஸ்லா த்தின்மீது கடுமையான யுத்தங்களை யெல்லாம் கொண்டு வந்தனர். மௌட்டீக உலகத்தார் தம் மனம்போனபடி யெல்லாம் திரிந்தகாலத்தில் இஸ்லாத்தின் இனிமையான உபதேசம் அவர்களுக்குக் கஷ்டமானதாகவே காணப்பட் டது; ஆனால் இக்காலத்தில் மனிதர்கள் அறிவிலும் ஆரா ய்ச்சியிலும் முதிர்ந்திருப்பதால் நம் சன்மார்க்கத்தின் சார மான சாந்திமொழிகளைக் கேட்க இவ்வுலகம் இப்போது மிகப் பக்குவமடைந்திருக்கிறது.

ஆனால் நமது நபிகள் பெருமானாரின் சன்மார்க்கத் தைப் பரப்புவதற்கு நாம் 40 கோடி முஸ்லிம்களும் ஒருங் கே பாடுபடவேண்டியிருக்க, நமக்குள் பாதிக்கு மேற் பட்ட நம் சகோதரர்கள் பாமரத்தன்மையி லிருக்கின்ற னர். மிகுதிப்பேர்கள் ஒருவரை யொருவர் பொறாமை கூறுவதிலும் பழிச்சொல் சுமத்துவதிலும் காலங்கழிக் கின்றனர். நமக்குள்ளேயே இப்படி யிருந்தால் நம் சன் மார்க்கம் எப்படி முன்னுக்குவரும்? கற்றறிந்த மகான் கள் கல்வியறிவில்லா முஸ்லிம்களை முன்னுக்குக்கொண்டு

வருவதில் ஒவ்வொருவரும் தம்மாலியன்றதைச் செய்ய வேண்டும். லண்டன் முஸ்லிம்கள் பாடுபட்டு இஸ்லாத்தைப் பரப்புவதேபோல் நாமும் பாடுபடவேண்டும். பாடுபடும் பிறரைக்கண்டு பொறாமை கொள்வதில் பயனில்லை.

நீங்கள் இஸ்லாத்தில் சொல்லப்பட்டபடி ஒழுகி ஒவ்வொன்றின் தாத்பரியத்தையும் உணர்ந்து அதனதன் காரியாகாரியங்களை ஆய்ந்தோய்ந்து பார்த்து நமக்குள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்ளாமல் ஒருவரோடொருவர் மனமொத்து ஒவ்வொரு முஸ்லிமும் தன்னாலியன்றதை இஸ்லாத்தின் மேன்மைக்காகச் செய்து இச்சன்மார்க்கத்தின் உண்மையான சித்தாந்தங்களை உலகமுழுதும் பரப்ப முயலுவீரேல், "முற்பகல்மீது ஆணையாகவும், மூடுகிற நேரமான இரவின்மீது ஆணையாகவும், உமது நாயகன் உம்மைக் கைவிடவுமில்லை, பகைக்கவுமில்லை. இன்னும், முன்னையதைப் பார்க்கினும் பின்னையது உமக்கு நல்லதாயிருக்கிறது. இன்னும், உம்முடைய நாயகன் இனிமேல் (சீக்கிரம்) உமக்குக் கொடுப்பான்; பின்பு நீர் திருப்திகரமாக (அவன் கிருபையை)ப் பொருந்திக் கொள்வீர்."

---

கமலம்-2. 1—2—20. இதழ்-2.

முபல்லிலன்

# இஸ்லாத்தின் இனி வரும் உன்னதம்

(1—1—20-ல் பிரசங்கிக்கப்பட்டது.)

" அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹுத் தஆலாவின் திருநாமத்தால்.

1. அல்லாஹுத் தஆலாவாகிய நானே மிக அறிந்தவன்.